# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 15.05.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் நான் இறைவனின் **வாஸிஃ** என்ற பண்பு தொடர்பான திருக்குர்ஆனில் காணப்படுகின்ற சில போதனைகளையும் கட்டளைகளையும் எடுத்துரைத்தேன். இன்றும் இதே கருத்தை தொடர்கிறேன். இது தொடர்பாக சில வசனங்களின் வெளிச்சத்தில் கூறப்பட்டுள்ள எச்சரிக்கை மற்றும் பிற கருத்துக்களை எடுத்துரைப்பேன். இது நமது அன்றாட வாழ்க்கை, ஆன்மீகம், நல்லொழுக்கம் போன்றவற்றோடு தொடர்புடையதாகும்.

அல்லாஹ் தனது எல்லையில்லாத ஞானத்தின் காரணமாக நமது அறிவையும் செயலையும் அவன் சூழ்ந்துள்ளான். அவன் கட்டளைகளையும், போதனைகளையும் வழங்கி அவன் காட்டுகின்ற நேர்வழியில் சென்று அல்லாஹ்வின் அளவற்ற அருட்கொடைகளிலிருந்து தத்தமது சக்திக்கும், தகுதிக்கும் ஏற்ப பங்கு பெறலாம். இதன் மூலம் அல்லாஹ்வின் விருப்பத்தை நாம் பெறலாம். அல்லாஹ் இது தொடர்பாக நமது குடும்ப விஷயங்களிலும் நமக்கு வழிகாட்டியுள்ளான். நமது சமூக விஷயங்களிலும் நமக்கு வழிகாட்டியுள்ளான். நமது ஆன்மீக போக்கையும் சரியான திசையில் இட்டுச் செல்வதற்கு நமக்கு வழிகாட்டியுள்ளான். நமது ஆன்மீக நல்லொழுக்க நிலைகளை அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்வதற்கும் நமக்கு வழிகாட்டியுள்ளான்.

ஆக, மனித வாழ்வின் எல்லா அம்சத்தையும் அல்லாஹ் முழுமையாக சூழ்ந்திருக்கிறான். ஏனென்றால் இறைவனது பண்புகளை மனிதன் தன்னில் உருவாக்க வேண்டும் என்று இறைவன் கட்டளையிட்டுள்ளான். எனவே, மனிதன் தனது ஆன்மீக, நல்லொழுக்க நிலைகளை அடைவதற்கு தனது முயற்சியிலும் செயல்பாட்டிலும் இன்னும் விரிவாக்கத்தை ஏற்படுத்த இறைவன் இந்த பண்பின் மூலம் நமக்கு கட்டளையிடுகிறான். இதன் மூலம் மனிதன் இறைவனது நெருக்கத்தைப் பெறுபவனாகலாம். ஆனால் அதோடு அல்லாஹ் உங்களுடைய சக்தியை நன்கு அறிகின்றான். எனவே நான் உங்களிடம் ஒப்படைத்துள்ள பணிகள் உங்களது சக்திக்கு அப்பாற்பட்டது அல்ல. எல்லா மனிதர்களின் சக்தியும், திறனும் ஒரே மாதிரியானதல்ல. எனவே அல்லாஹ் கட்டளை இடுகின்றபோது அவன் சக்திக்கு அப்பாற்பட்ட கட்டளையை யாருக்கும் வழங்குவதில்லை. ஆனால் தனது சக்தியின் எல்லையை நிர்ணயிப்பது மனிதனின் வேலை இல்லை. இறைவன் ஒருவனே எல்லாருடைய சக்தியையும், திறமையையும் நன்கு அறிந்தவன் ஆவான்.

எனவே இறைவன் இறக்கிய கட்டளைகளைப் பற்றி இது எங்களது சக்திக்கு அப்பாற்பட்டதாகும் என்று யாரும் கூற முடியாது. எனினும் இறைவன் மனிதனுக்கும் திறமையை வழங்கியுள்ளான். அந்த திறமைகளை வெளிக்கொண்டு வருவதும் அதை வளர்த்துக் கொள்வதும் மனிதனின் கடமையாகும். அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களுக்கு அழகிய முன்மாதிரி ஆவார்கள் என்று நம்மிடம் கூறி அந்த தலைசிறந்த முன்மாதிரியைப் பின்பற்றவும் நமக்கு கட்டளையிட்டுளளான். அல்லாஹ் இன்ஸானே காமில் அதாவது முழுமையான மனிதரைப் படைத்தான். அவரது திறமைகளுக்கும், சக்திக்கும் எல்லையே இல்லை. அவர்களது வாழ்க்கையின் எந்தவொரு அங்கத்தை நாம் எடுத்துக் கொண்டாலும் சரி, அதில் நமக்கு மிக உன்னதமான திறன் தென்படும். ஆனால் நமது முன்மாதிரி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவர்களைப் பின்பற்றுவது நமக்கு கடமையாகும். அதன்படி செயல்படுவதற்கு முடிந்த அளவு முயற்சி செய்ய வேண்டும்.

நான் துவக்கத்தில் அல்லாஹ் நமக்கு வழிகாட்டியுள்ளதில் குடும்ப வாழ்க்கையும் ஒன்றாகும் என்று கூறினேன். திருக்குர்ஆனில் சில வசனங்களை நான் உங்கள் முன் எடுத்துரைக்கிறேன். ஆனால் அதற்கு

முன் இது தொடர்பான ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறந்த முன்மாதிரியை எடுத்துரைக்க விரும்புகிறேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தங்களது குடும்பத்தாரோடு எவ்வாறு நடந்து கொண்டார்கள். இதில் அவர்கள் எண்ணற்ற சிறந்த தகுதிகளை நிலைநாட்டியுள்ளார்கள்? இது தொடர்பாக சிலவற்றை கூறுகின்றேன்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருமுறை கூறினார்கள்:**

தனது குடும்பத்தாரோடு சிறந்த முறையில் நடந்து கொள்பவர் தான் உங்களுள் மிகச் சிறந்தவர் ஆவார். நான் உங்கள் எல்லாரையும் விட குடும்பத்தாரோடு நடந்து கொள்வதில் மிகச் சிறந்தவன் ஆவேன். பிறகு நமக்கு அறிவுரை கூறினார்கள். உங்களில் ஒருவருடைய குறை மற்றவருக்கு தென்பட்டால் அல்லது உங்களுக்கு பிடிக்காத செயல் தென்பட்டால் பல நல்ல விஷயங்களும் இருக்கும். உங்களுக்கு பிடித்தமான பல விஷயங்கள் இருக்கும். அதை முன்னிறுத்தி விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மையை கையாள வேண்டும். ஒற்றுமையின் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இது ஆண், பெண் இரு சாராருக்கும் உள்ள கட்டளையாகும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எப்போதும் தனது மனைவிகளோடு நல்ல முறையில் நடந்துள்ளார்கள் என்பதற்கு அவர்களின் எல்லா மனைவிகளும் சாட்சி ஆவார்கள். பயணம் சென்றால் மனைவிகளின் பெயரை சீட்டுக் குலுக்கிப் போடுவார்கள். யாருடைய பெயர் வருமோ அவரை அழைத்துச் செல்வார்கள். மனைவிகள் உடல்நலமின்றி இருந்தால் அவர்களை நலம் விசாரிப்பார்கள். அவர்களின் உணர்வுகளை மதிப்பார்கள். இவ்வாறு இருந்தபோதிலும் அவர்கள் இவ்வாறு துஆ செய்கிறார்கள். இறைவா! மனித சக்தியின் அடிப்படையில் நீதியோடு நான் நடந்து கொள்கிறேன். என் இறைவனே! உள்ளங்களை நான் அறிய மாட்டேன். ஒருவருடைய திறமையின் காரணமாக என் உள்ளம் அவர் பக்கம் சாய்ந்தால் நீ என்னை மன்னிப்பாயாக.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களோடு இருந்த தொடர்பு பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள். கதீஜா நான் தனியாக இருந்த போது எனக்கு துணை ஆனார்கள். நான் உதவிகள் அற்று இருந்த போது எனக்கு உதவி செய்தார்கள். கதீஜா சிறிதும் தயங்காமல் எனக்காக செல்வத்தை செலவிட்டார்கள். அல்லாஹ் என் மூலம் அவர்களுக்கு குழந்தைகளையும் வழங்கினான். அனைவரும் என்னை பொய்யனாக்கிய போது கதீஜா என்னை உண்மைப்படுத்தினார்கள். அவர்களின் உள்ளத்தில் எப்போதும் எனக்கு மரியாதை இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதைக் கூறும்போது உயிரோடும் இளமையோடும் மனைவிகள் இருந்தார்கள். அவர்களுக்கு மிகவும் பிடித்தமான மனைவியும் இருந்தார்கள். இறைவனின் வஹி அவர்களின் (ஆயிஷா) அறையில் இருக்கும் போது இறங்குகிறது. எனவே மிகவும் விருப்பமான மனைவி ஆவார்கள். உங்களுடைய பல மனைவிகள் உயிரோடு இருக்கிறார்கள். ஏன் எப்போதும் அந்த கிழவியைப் பற்றியே கூறிக் கொண்டிருக்கின்றீர்கள்? என்று அவர்கள் கேட்டதற்கு மிகவும் அன்போடு குறுகிய மனப்பான்மையோடு நடந்து கொள்ள வேண்டாம். பரந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். இந்தந்த காரணத்தால்தான் நான் எனது முதல் மனைவியை எப்போதும் நினைவு கூறுகிறேன் என்று கூறுகிறார்கள்.

இன்று மேற்கத்திய நாட்டில் வசிப்பவர்களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்பவர்களும் வீணான ஆட்சேபனைகளை எல்லை இல்லாமல் செய்து கொண்டே இருக்கிறார்கள். இவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி தென்படவில்லையா? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எவ்வாறு குடும்ப உரிமைகளை பேணினார்கள் என்று இவர்கள் பார்ப்பதில்லை. உயிரோடு இருந்த மனைவியர்களுடனும் வெளிப்படையான ரீதியில் சமமாக நடந்து கொண்டார்கள். உள்ளத்தை யாராலும் கட்டுப்படுத்த முடியாது என்றாலும் வெளிப்படையான நடைமுறையில் சமத்துவத்தை நிலைநாட்டினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக தமது செல்வத்தையெல்லாம் செலவு செய்த மனைவியைக் குறிப்பிட்டு நான் இதை மதிக்கிறேன் என்று கூறினார்கள்.

இவ்வாறு நான் இதை மதிக்கத் தவறி விட்டால் இறைவனின் முன் நன்றியுள்ளவன் என்று என்னைக் கூற முடியாது. அவன் என்னை ஒருபோதும் தேவையுடையவனாக ஆக்கவில்லை. அவன் தனது எல்லாயில்லாத அருட்கொடைகளிலிருந்து வாரி வழங்கிக் கொண்டிருக்கிறான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது மனைவிகளோடு சிறந்த முறையில் நடந்து கொண்டார்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் நீங்கள் நீதியை நிலைநாட்டுங்கள் என்று கட்டளை இடுகிறான். தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இது இறைவனின் கட்டளையாகும். இதன்படி செயலாற்றுங்கள் என்று போதித்தார்கள். இதற்கான உயர்ந்த முன்மாதிரியை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள். திருக்குர்ஆனில் அல்லாஹ் ஒன்றிற்கும் மேற்பட்ட திருமணங்கள் செய்வது தொடர்பாக கட்டளையிட்டுள்ளான் என்றால் சில நிபந்தனைகளையும் விதித்துள்ளான்.

இஸ்லாத்தின் மீதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதும் இதை ஆட்சேபனை செய்கிறார்கள். ஒற்றிற்கு மேற்பட்ட திருமணங்கள் செய்து கொள்ள அனுமதி வழங்கி பெண்களின் மீது அநீதியிழைக்கப்பட்டுள்ளது என்று ஆட்சேபனை செய்கிறார்கள். இங்கு ஆண்களின் உணர்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறுகிறார்கள். இது தொடர்பாக இறைவன் கூறுகிறான்.

உங்களால் அனாதைகளின் விஷயத்தில் நீதியுடன் நடக்க முடியாது என நீங்கள் அஞ்சினால், (மற்றப்) பெண்களிலிருந்து உங்களுக்கு இணக்கமான பெண்களுள் இரண்டோ மூன்றோ நான்கோ மணந்து கொள்ளுங்கள். ஆனால் இதில் உங்களால் நீதியுடன் நடக்க இயலாது என நீங்கள் அஞ்சினால் ஒருத்தியை அல்லது வலக்கரங்களில் உள்ளவளை (மணந்து கொள்ளுங்கள்). இது நீங்கள் அநீதியிழைக்காமல் இருப்பதற்கு மிகவும் நெருங்கியதாகும் (4:4)

இவ்வசனத்தில் அல்லாஹ் அனாதைப் பெண்களின் உரிமையைப் பாதுகாத்துள்ளான். நீங்கள் அடிமைப் பெண்களை அநியாயம் இழைக்கும் நோக்கத்தோடு திருமணம் செய்து கொள்ளாதீர்கள். அவர்களுடைய எல்லா உரிமைகளையும் முழுமையாக செலுத்தியவாறு திருமணம் செய்யுங்கள். திருமணத்திற்குப் பிறகு அவர்களுடைய உணர்ச்சிகளை நீங்கள் மதிக்க வேண்டும். இவர்களை கேட்பார் யாருமில்லை. அனாதைதானே! எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம் என்று நீங்கள் ஒருபோதும் நினைத்து விட வேண்டாம். நீங்கள் அனாதைப் பெண்களை திருமணம் செய்வதால் அவர்களோடு நீதியுடன் நடந்து கொள்ள முடியாது என்று நீங்கள் உங்கள் மீதே அச்சம் கொண்டால் சுதந்திரமான பெண்களை திருமணம் செய்து கொள்ளுங்கள். இரண்டோ மூன்றோ அல்லது நான்கோ திருமணங்கள் செய்து கொள்ள உங்களுக்கு அனுமதி உண்டு. ஆனால் நீதியை நிலைநாட்டி ஆக வேண்டும். அவ்வாறு உங்களால் நீதியை நிலைநாட்ட முடியாது என்றால் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் செய்து கொள்ள வேண்டாம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள்:**

நீங்கள் வளர்த்து வருகின்ற அனாதைப் பெண்களை மணம் முடித்துக் கொள்வதில் எவ்வித குற்றமுமில்லை. ஆனால் அவர்கள் வாரிசற்றவர்கள் என்று கருதி உங்களது நஃப்ஸ் அவர்கள் மீது அநீதியிழைத்து விடும் என்று நீங்கள் கருதினால் தாய், தந்தை மற்றும் பிற உறவினர்களைக் கொண்ட பெண்களையே திருமணம் செய்து கொள்ளுங்கள். அவர்களைப் பற்றிய அச்சம் உங்களுக்கு இருக்க வேண்டும். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு வரை திருமணம் செய்து கொள்ளலாம். நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பது நிபந்தனையாகும். நீதியை நிலைநாட்ட முடியவில்லையென்றால் தேவை இருந்தபோதிலும் ஒரு திருமணம் மட்டுமே உங்களுக்கு போதுமானது.

இக்காலகட்டத்தில் ஹகம், அத்ல் மார்க்க விஷயத்தில் நீதியோடு தீர்ப்பு வழங்குகிற இமாம் உங்களுக்கு தேவை இருந்தபோதிலும் என்று கூறி நீங்கள் உங்களது தேவையை காரணம் காட்டி இன்னொரு திருமணம் செய்து கொள்ள விரும்பினாலும், உண்மை என்னவென்றால் உங்கள் தேவைக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. மாறாக, சமூகத்தின் அமைதியும் நீதியும் தான் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது

என்று உணர்த்தி விட்டார்கள். இன்றைய நாட்களில் ஆங்காங்கே புகார் எழுகிறது. குழந்தைகளும் சந்ததிகளும் இருக்கிறது என்றாலும் கணவன் பல்வேறு காரணங்களைக் காட்டி இன்னும் ஒரு திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார். இதில் முதல் விஷயம் நீங்கள் நீதியை நிலைநாட்ட முடியாது என்று கருதினால் திருமணம் செய்து கொள்ளாதீர்கள். நீதி என்பதில் எல்லா வகையான உரிமையையும் பேணுவது அடங்கும். உங்கள் வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியாத அளவிற்கு மிகக் குறைவான வருமானம் வருகிறது என்றால் இன்னும் ஒரு திருமணம் செய்து சுமையை அதிகமாக்கிக் கொள்வது முதல் மனைவியின் உரிமையைப் பறிப்பதற்கு சமமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நிர்பந்தமான சூழ்நிலையில் இன்னொரு திருமணம் செய்து கொண்டால் முதல் மனைவியை முன்பை விட அதிகமாக கவனியுங்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் பொதுவாக நமக்கு தென்படுவது என்னவென்றால் முதல் மனைவியின் உரிமையை வழங்குவதிலிருந்து மெல்ல மெல்ல விலகிவிடுகிறார்கள். பிறகு அல்லாஹ்வின் கட்டளைக்கு புறம்பாக நடந்து கொள்கிறார்கள். ஆக செல்வம் மற்றும் பிற உரிமைகளைப் பேணும்போது அநீதியிழைக்கக் கூடாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் தன்னைத்தானே சோதனைக்கு ஆளாக்கிக் கொள்ளக் கூடாது. மனைவியின் உரிமையை பேணாமல் மனிதன் சோதனைக்கு ஆளாகி விடுகிறான். இது இந்த அளவு முக்கியமான பணியாகும். இறைவனின் கோபத்திற்கும் ஆளாகி விடுகிறான்.

நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒரு துஆவைப் பற்றி கூறினேன். அதாவது அல்லாஹ்விடம் அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். நான் வெளிப்படையான ரீதியில் எல்லாருடைய உரிமையையும் வழங்க முயற்சி செய்கிறேன். ஆனால் ஏதாவது ஒரு மனைவியின் சில சிறப்புகள் காரணமாக ஓரளவு அவள் பக்கம் சாய்ந்து விட்டால் இது எனது கட்டுப்பாட்டின் கீழ் இல்லை. அவ்வாறான வேளைகளில் நீ என்னை மன்னிப்பாயாக. இது மனித இயல்பின் அடிப்படையிலான மறுக்க முடியாத உண்மையாகும். இறைவன் மனிதனை படைத்துள்ளான். ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் செய்து கொள்ள அனுமதியும் வழங்கியுள்ளான். அவன் தனது அடியாரின் மனநிலையையும் நன்கறிந்தவன் ஆவான். அதன் ஆழத்தையும் அவன் நன்கறிந்தவன் ஆவான். மறைவானதையும் நன்கறிவான். அவனே இது தொடர்பாக திருக்குர்ஆனில் விளக்கியுள்ளான். நீங்கள் சில சூழ்நிலையின் காரணமாக ஒருவர் பக்கம் அதிகமாக சாய்ந்தால், வெளிப்படையான உரிமைகளை பிறருக்கு முழுமையாக வழங்குவது உங்கள் மீது கடமையாகும்.

அல்லாஹ் சூரத்துந் நிஸாவில் கூறுகிறான். நீங்கள் விரும்பினாலும் மனைவியருக்கிடையில் சம நிலையில் நடந்து கொள்ள உங்களால் ஒருபோதும் இயலாது. எனினும் ஒருத்தியின் பக்கமே முற்றிலும் சாய்ந்து மற்றொருத்தியை அந்தரத்தில் தொங்க விடாதீர்க்ள. நீங்கள் உங்களை திருத்திக் கொள்ளவும் இறையச்சத்தை மேற்கொள்ளவும் செய்தால் நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான் (என்பதை உணருங்கள்). (4:130)

மனிதனுடைய சக்திக்கு அப்பாற்பட்டதாக இருந்தால் அதில் முழுமையான நீதியை பேண முடியாமல் போனால் மனிதனுடைய சக்திக்கு உட்பட்டத்தில் நிச்சயமாக நீதியைப் பேணுவது அவசியமாகும். வெளிப்படையான நீதியில் நான் ஏற்கனவே கூறியது போன்று உணவு, உடை, இருப்பிடம், நேரம் இவ்வனைத்தும் அடங்கும். செலவுக்கு மட்டும் கொடுத்து விட்டு நேரத்தை கொடுக்காமல் இருந்தால் இது சரியல்ல. இருப்பிடம் மட்டும் ஏற்பாடு செய்து அன்றாடத் தேவைக்கு எதுவுமே கொடுக்காமல் மக்கள் மத்தியில் அவளை கையேந்தும் நிலையில் விட்டு விட்டால் இதுவும் சரியல்ல. ஆக வெளிப்படையான ரீதியில் முழு பொறுப்பையும் நிறைவேற்றுவது ஆணின் மீது கடமையாகும்.

**ஒரு அறிவிப்பில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக வருகிறது.**

ஒருவருக்கு இரண்டு மனைவிகள் இருந்து, அவர் ஒருத்தியின் பக்கமே அதிகம் சாய்ந்து, இன்னொருத்தியைப் புறக்கணித்தால் கியாமத் நாளன்று அவருடைய உடலில் ஒரு பகுதி தனியாக துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் எழுப்பப்படுவார். எனவே அல்லாஹ் கூறுகிறான். இருவருடைய வெளிப்படையான உரிமைகளையும் சமமாக நிறைவேற்றுங்கள். எந்த மனைவியையும் அவள் மனைவியாக இருந்தபோதிலும் எல்லா உரிமைகளும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருக்கக் கூடாது. இதுவே இறையச்சமாகும். நீங்கள் அவளை விட்டு விலகுவதும் இல்லை. அவளுடைய உரிமையைச் சரியாக பேணுவதுமில்லை. இது ஒரு மூஃமினுக்கு வழக்கமாக இருக்கக் கூடாது.

அல்லாஹ் தடுத்தவற்றிலிருந்து விலகி தன்னை சீர்திருத்திக் கொள்பவரே மூஃமின் ஆவார். எனக்கு சில புகார்கள் வருகின்றன. ஒரு மனைவியின் பக்கம் அதிக கவனம் செலுத்துகிறார்கள். மற்ற மனைவியை முற்றிலும் கவனிக்காமல் விட்டு விடுகிறார்கள். சில நேரம் ஒரு மனைவியின் சாக்குப்போக்கை வைத்து உன்னை தலாக் கொடுக்கவும் மாட்டேன். உன்னோடு வாழவும் மாட்டேன் என்று கூறுகின்றார்கள். இது ஒரு மனைவி இருக்கின்ற நிலையிலும் இவ்வாறு கூறுகின்றார்கள். கஸா அல்லது நீதிமன்றத்தில் வழக்கு இருந்தாலும் அந்த வழக்கை வேண்டுமென்றே எக்காரணமும் இன்றி தாமதமாக்குகின்றார்கள். பிரச்சனை நீண்டு கொண்டே செல்ல வேண்டும் என்பதற்காக பல சாக்குப்போக்குகளை கூறுகின்றார்கள்.

சில பெண்களுக்கு தலாக் கொடுக்காமல் இருப்பதற்கு அவள் தானாகவே முன் வந்து குலா பெற்றுக் கொண்டால் மஹர் கொடுக்காமல் அதை மிச்சம்பிடித்து விடலாம் என்று நினைக்கிறார்கள். இவையெல்லாம் இறையச்சத்தை விட்டு நம்மை வெகுதூரம் விலக்கி விடுகின்ற செயலாகும்.

நீங்கள் உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றார்கள். நீங்கள் பாவமன்னிப்பு வேண்டி கருணையை எதிர்பார்க்கின்றீர்கள் என்றால் நீங்களும் கருணை காட்டுங்கள். மனைவிக்கு அவளது உரிமையை வழங்கி வீட்டில் வாழ வையுங்கள். அல்லாஹ்வின் எல்லையில்லாத கருணையை நீங்கள் அவனிடம் வேண்டுகின்றீர்கள் என்றால் நீங்களும் கருணை காட்ட வேண்டும்.

நான் வாசித்த திருக்குர்ஆன் வசனத்தின் அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். அவ்விருவரும் பிரிந்து விட்டால் அல்லாஹ் தன் வளத்தால் அவ்விருவரையும் அவரவரது சக்திக்கு ஏற்றாற்போல் தன்னிறைவு பெற்றவர்களாக ஆக்குவான். அல்லாஹ் வளம் நிறைந்தவனும் நுண்ணிய ஞானமுள்ளவனும் ஆவான். (4:131)

இவ்வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். சீர்திருத்தத்திற்காக எந்தவொரு வழியும் இல்லையென்றால் அவளை அந்தரங்கத்தில் தொங்க விட்டு விடாதீர்கள். அவளுடைய உரிமையை வழங்கி அழகிய முறையில் அவளை விலக்கி விடுங்கள். ஒரு கணவர் தனது மனைவியை அந்தரங்கத்தில் தொங்க விட்டு விட்டால் இவ்வாறான சூழ்நிலையில் பெண்களுக்கும் காஸியின் மூலம் குலா பெற்றுக் கொள்ள உரிமையுண்டு.

அல்லாஹ் கூறுகிறான். ஒரு மூஃமின் ஆண், ஒரு மூஃமின் பெண் இருவரும் அன்போடும் நேசத்தோடும் வாழ முழு முயற்சியும் செய்ய வேண்டும். அவ்வாறு வாழ முயற்சி செய்தால்தான் இறையச்சம் உடையவர் என்று அழைக்கப்படுவர். அன்போடு இணக்கமாக வாழ எந்த வழியும் இல்லையென்றால் பிறகு ஒருவரைவிட்டு மற்றவர் நேர்மையான முறையில் மணவிலக்கு பெற்றுக் கொள்ள வேண்டும். ஆண்கள் மிக அழகிய முறையில் பெண்ணின் உரிமையை செலுத்தியவாறு அவளை விட்டு விட வேண்டும். இதுவே ஒரு ஆணிற்கு கடமையாகும். இதுவே ஒரு பெண்ணிற்குரிய உரிமையுமாகும். இறையச்சத்தை மேற்கொண்டவாறு இணைந்து வாழ எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் வீணாகி விட்டதன் காரணமாக இவர்கள் விலகுகிறார்கள். அல்லாஹ் கூறுகிறான். இவ்வாறான சூழ்நிலையில் அல்லாஹ் தனது எல்லையில்லா கருணை மற்றும் அருளால் ஆண், பெண் இருவரின் நலனுக்காக சிறந்த ஏற்பாட்டை செய்து விடுவான். அவர்களை தன் அருளால் தன்னிறைவு பெற்றவர்களாக்கி விடுவான். ஆண், பெண் இருவரும் விலகுவது ஒரு ஹதீஸின்

அடிப்படையில் அல்லாஹ்வின் பார்வையில் மிகவும் பிடித்தமில்லாத செயலாகும் என்று தெரிகிறது. ஆனால் இறையச்சத்தின்படி வழி நடந்தவாறு இந்த உறவை இணைத்து வைப்பதற்காக எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்து விட்டது. எனவே உள்ளங்களின் நிலையை நன்கறிந்துள்ள இறைவனின் முன் குனிந்தவாறு பிரிந்துதான் ஆக வேண்டும் என்று முடிவெடுக்க நேர்ந்தால் இருவருக்கும் இறைவன் தனது எல்லையில்லாத கருணையால் அருள்புரிகிறான். ஏனென்றால், அவன் ஹகீம் – நுண்ணறிவுள்ளவன் ஆவான். எனவே அல்லாஹ்வின் உதவியை வேண்டியவாறு எடுக்கப்பட்ட முடிவுகள் மிகவும் ஞானம் மிகுந்தவயையாக இருக்கும். அல்லாஹ் வழிகாட்டலைப் பெற்றவாறு இருக்கும்.

இந்த வசனத்தில் ஒரு பொதுவான விஷயம் கூறப்பட்டுள்ளது. அதாவது, உணர்ச்சிவசப்பட்டு ஒருபோதும் வரன் முடிவு செய்யக் கூடாது. பெற்றோர் தரப்பானாலும் , மாப்பிள்ளை, பெண் ஆனாலும் சரி, உணர்ச்சிவசப்பட்டு ஒருபோதும் உறவுகள் முடிவு செய்யப்படக் கூடாது. மாறாக, இறைவன் எல்லாவற்றையும் நன்கறிந்தவன் ஆவான். அவன் எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளான். எனவே அவனிடம் உதவி தேடியவாறு துஆ செய்து மிகவும் நிதானமாக சிந்தித்து வரன் முடிவு செய்ய வேண்டும். அவ்வாறு உறவுகள் இணையும் போது அல்லாஹ் தனது அருளால் அதில் விசாலத்தை ஏற்படுத்துகிறான். அல்லாஹ் அவர்களை தன்னிறைவு பெற்றவர்களாக்கி விடுகிறான். அவர்களது செல்வத்திலும் வளத்தையும் அபிவிருத்தியை ஏற்படுத்துகிறான். அவர்களது தொடர்பிலும் அல்லாஹ் விசாலத்தை ஏற்படுத்துகிறான்.

நான் தலாக்கைப் பற்றி கூறினேன். சிலர் தலாக் கொடுக்காமல் பிரச்சனையை இழுத்தடிக்கிறார்கள். ஒன்று திருமணம் முடிந்து சில காலம் வரை ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்கின்றனர். சில நேரம் அவர்களுக்கு பிள்ளைகளும் பிறந்து விடுகிறது. அதன் பிறகு தலாக்கின் சூழ்நிலை ஏற்படுகிறது. பெண்ணுக்கு கொடுக்க வேண்டிய உரிமை வெளிப்படையாகவே தெரியும். பிள்ளைகளுக்கு உரிய செலவு, மஹர் போன்ற உரிமையை ஒரு ஆண் கண்டிப்பாக கொடுத்தே ஆக வேண்டும். ஆனால் சில நேரம் பெண்கள் மாப்பிள்ளை வீட்டிற்குக் கூட போய் இருக்கமாட்டார்கள். அதற்குள் தலாக்கிற்கான சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அல்லது மஹர் இன்னும் முடிவாகாத சூழ்நிலையில் தலாக் ஏற்பட்டு விடுகிறது. அப்போதும் பெண்களின் உரிமையை கட்டாயம் கொடுக்க வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான்.

**சூரா பக்கராவில் அல்லாஹ் கூறுகிறான்:**

நீங்கள் பெண்களை தொடாமலோ அவர்களுக்கு மஹரை முடிவு செய்யாமலோ இருக்கும்பொழுது அவர்களுக்கு தலாக் கொடுத்தால் உங்கள் மீது எக்குற்றமும் இல்லை. நீங்கள் நல்ல முறையில் அவர்களின் வாழ்க்கைக்கு வேண்டியவற்றுள் சிறிது வழங்குங்கள். செல்வந்தர் தன் தகுதிக்கு ஏற்பவும் வழங்க வேண்டும். நல்லவர்களுக்கு இது கடமையாகும். (2:237)

இந்த வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்: கணவன் தரப்பிலிருந்து ஏதாவது காரணத்தால் உறவை பேண முடியாது என்று வரும்போது அந்த உறவை முடிக்கும் போது மனைவியுடன் கருணையோடு நடந்து கொள்ள வேண்டும். தனது தகுதிற்கு ஏற்ப அவளுக்கு கொடுக்க வேண்டும். அல்லாஹ் தாராளமாக வழங்கியுள்ளான் என்றால் கணவர் அந்த தாராளத்தை வெளிப்படுத்த வேண்டும். இறைவன் வழங்கிய தாராளத்தை நீங்கள் வெளிப்படுத்தவில்லை என்றால் அதே இறைவன் அந்த தாராளத்தை நிறுத்துவதற்கும் சக்தி படைத்தவன் ஆவான். அவன் வழங்கிய தாராளத்தை கஷ்டநிலையாக மாற்றுவதற்கும் வல்லமையுள்ளவன் ஆவான்.

எனவே, இறைவனின் அருளிலிருந்து பங்குபெற வேண்டும் என்றால் அல்லாஹ் வழங்கிய அருளை பெண்களின் மீது கருணைகாட்டுவதன் மூலம் வெளிப்படுத்துங்கள். அல்லாஹ் ஒரு ஆன்மாவின் மீது அதன் சக்திக்கு அப்பாற்பட்ட சுமையை சுமத்துவதில்லை. எனவே ஒரு ஏழை தன்னால் அதிகம் வழங்க முடியாது என்றால் அவர் தனது சக்திக்கும் தகுதிக்கும் ஏற்ப ஏதாவது கொடுக்க வேண்டும். நீங்கள் நன்மை செய்து இறையச்சத்தின்படி செயலாற்றுகிறீர்கள் என்றால் பெண்களின் மீது இவ்வாறு கருணை காட்டுவது உங்கள் மீது கடமையாகும் என்று அல்லாஹ் கூறுகிறான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் இந்த கட்டளையை எந்த அளவு பேணி வந்தார்கள்! இது ஒரு ஹதீஸின் மூலம் நமக்கு தெரிய வருகிறது. ஒரு முறை ஒரு அன்சாரி திருமணம் செய்தார். பிறகு அந்த பெண்ணை தொடுவதற்கு முன் அவளுக்கு தலாக் கொடுத்து விட்டார். அந்த திருமணத்ற்கான மஹர் நிர்ணயிக்கப்பட வில்லை. இந்த பிரச்சனை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் வைக்கப்பட்ட போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கொடுப்பதற்கு உன்னிடம் எதுவுமே இல்லை என்றால் உனது தலையில் உள்ள தொப்பியைக் கொடுத்து விடு என்று கூறினார்கள்.

ஆக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு பெண்களின் உரிமையைப் பேணுவதில் முக்கியத்துவம் வழங்கியுள்ளார்கள் என்று இந்த சம்பவத்திலிருந்து தெளிவுபடுகிறது. இங்கு மஹர் முடிவு செய்யப்படாத நிலையிலும் ஏதாவது கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறே மஹர் முன்னதாகவே நிர்ணயிக்கப்பட்டிருந்தால் என்ன செய்ய வேண்டும்? இது தொடர்பாக மிகவும் தெளிவான கட்டளை உள்ளது. மஹர் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அதில் பாதியை கொடுக்க வேண்டும். இவ்வாறு திருக்குர்ஆன் பெண்கள் மற்றும் குடும்பத்தாரின் உரிமையை தீர்மானித்துள்ளது. இதில் ஆண்களின் கடமைகள் என்னவென்றும் தெளிவுபடுத்தியுள்ளது. அவர்களின் உறவு குழந்தைகளுக்கு பாலூட்டுவது ஆகியவை தொடர்பாகவும் மிகத் தெளிவான கட்டளைகள் உள்ளன. இவ்வாறே பெண்களின் கடமைகளையும் அல்லாஹ் விளக்கியுள்ளான். அந்த பொறுப்பு குழந்தைகள் மற்றும் கணவன் தொடர்பானவையாகும். இந்தக் கடமையை நிறைவேற்றுவது பெண்களின் கடமையாகும்.

ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஒருவர் மீது உள்ள மற்றவரது கடமையை கூறும்போது இறைவன் கூறுகிறான்: இவ்வனைத்து பொறுப்புகளையும் நாம் உங்களது சக்தியையும் திறனையும் கருத்தில் கொண்டு அதன் அடிப்படையில் பொறுப்புகளை சுமத்தியுள்ளோம். எனவே இதை நீங்கள் நிறைவேற்றுங்கள். இதற்கு இன்னும் பல விளக்கங்கள் உள்ளன. அதை நான் இப்போது உங்களுக்கு கூறவில்லை.

இப்போது நான் உங்களுக்கு இரண்டு விஷயங்களைக் கூறியுள்ளேன். இதுவே போதுமானதாகும். ஒன்று, மனைவிகளின் உரிமைகள் தொடர்பாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி என்ன? அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக இந்த உரிமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றி நமக்கு அழகிய முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள்.

இரண்டாவது, இந்த அழகிய முன்மாதிரியைப் பின்பற்றி நடக்க முயற்சி செய்தவாறு ஒவ்வொரு அஹ்மதி முஸ்லிமும் இந்த உரிமைகளைப் பேணுவதற்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்க வேண்டும். குறிப்பாக அல்லாஹ் ஆண்களின் மீது சுமத்தியுள்ள பொறுப்புகளை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும்.

இப்போது நான் மற்றொரு விஷயத்தின் பக்கமும் உங்களுக்கு கவனமூட்ட விரும்புகிறேன். இது அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் பொதுவாக இல்லை. ஆனாலும் அஹ்மதி சமூகத்தில் இந்த குரல் ஆங்காங்கே கேட்க ஆரம்பித்துள்ளது.

**அல்லாஹ் திருக்குர்ஆன் சூரா அன்ஆமில் கூறுகிறான்:**

நீங்கள் அனாதையின் உடைமையை அவர் தமது வாலிபப்பருவத்தை அடையும் வரை முறையின்றி நெருங்காதீர்கள். மேலும் அளவையையும் நிறுவையையும் முழுமையாக கொடுப்பதில் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். நாம் தகுதிக்கு அப்பாற்பட்ட சுமையை எவருக்கும் வழங்குவதில்லை. நீங்கள் பேசும்பொழுது, அது உறவினராக இருப்பினும் நேர்மையை கடைபிடியுங்கள். மேலும் அல்லாஹ்விடம் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். நீங்கள் கவனத்தில் கொள்ளும் பொருட்டு அவன் உங்களுக்கு இதனை வலியுறுத்திக் கூறுகிறான். (6:153)

இவ்வசனத்தில் அல்லாஹ் ஐந்து விஷயங்களை செய்யுமாறு நமக்கு கட்டளையிடுகிறான். இது தவிர முதல் விஷயமாக நாம் யார் மீதும் தகுதிக்கு அப்பாற்பட்ட சுமையை சுமத்துவதில்லை என்று அல்லாஹ் பிரகடனம் செய்கிறான். நான் முதலில் கூறியது போன்று அல்லாஹ் தனது எல்லையில்லா அறிவினால்

மனிதனின் சக்திகள் என்னவென்று நன்றாக தெரியும். எனவே இறைவன் வழங்கியுள்ள கட்டளைகள் எல்லாமே நமது சக்திக்கு உட்பட்டதாகும். இவைகளை நம்மால் நிச்சயம் செய்ய முடியும்.

இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்களில் முதல் கட்டளை, நேர்மையான வழியில் அல்லாமல் நீங்கள் அனாதையின் செல்வங்களின் பக்கமே நெருங்காதீர்கள். அனாதையின் உடைமைகளை பெறுபவர்கள் அதற்கு அமீன் ஆவார்கள். எனவே அனாதைகளின் மேம்பாட்டிற்காக அவர்கள் அதை பயன்படுத்த வேண்டும். அல்லாஹ் இந்த வசனத்திற்கு ஓரிரு வசனங்கள் முன்பு இவ்வாறு கூறுகிறான். அதாவது அனாதைகளின் உடைமை பாதுகாப்பாக இருக்க வேண்டும். அவர்களுக்கு படிப்பு மற்றும் வளர்ப்புக்கான ஏற்பாட்டை நீங்கள் சுயமாக செய்யுங்கள். ஆனால் இந்த செலவை தாங்கிக் கொள்ள முடியாத வறியவர்கள் மிகவும் கவனத்தோடு அவர்களின் செல்வத்திலிருந்து அவர்களுக்காக செலவு செய்ய வேண்டும். அவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆவதற்கு முன் அவர்களது செல்வத்தை அழித்துவிடக் கூடாது. அனாதைகள் வளர்ந்து பெரியவர்களாவது வரை தான் அமீன் என்ற நீதியில் தனது பொறுப்பை சரியாக நிறைவேற்றுபவரே உண்மையான மூஃமின் ஆவார். எவ்வாறு தனது சொத்தை மிகவும் கவனத்தோடு எச்சரிக்கையாக வியாபாரத்தில் இலாபத்திற்காக முதலீடு செய்கிறாரோ அவ்வாறே அனாதைகளின் செல்வத்தையும் எச்சரிக்கையாக மிகவும் கவனத்தோடு இலாபம் தருகின்ற வியாபாரத்தில் முதலீடு செய்ய வேண்டும். எவ்வாறு தனது செல்வம் செலவாகும் போது வேதனை ஏற்படுகிறதோ அவ்வாறே அனாதையின் செல்வம் செலவாகும் போதும் வேதனை ஏற்பட வேண்டும். அனாதைகளின் வியாபாரத்தில் அருள் ஏற்படுவதால் அவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆகி விடும் போது அவர்களது வியாபாரத்தில் அபிவிருத்தி தென்படும் போது அனாதையாக இருந்தபோதிலும் அவர்கள் சமூகத்தில் மிகவும் கண்ணியமான அங்கமாகி விடுவார்கள்.

ஆனால் சில நேரம் சில புகார் எழுகிறது. அதில் உறவினர்கள் அனாதையின் செல்வத்தில் நம்பிக்கையோடு நடந்து கொள்ளவில்லை என்று தெரிகிறது. ஒருவருடைய சகோதரனின் மக்கள் அல்லது சகோதரியின் மக்கள் அனாதையாக இருக்கின்ற போது அவர்களின் செல்வத்திலிருந்து தவறான முறையில் பயனடைகிறார்கள். அவ்வாறான மக்களின் செல்வத்தில் ஒருபோதும் அபிவிருத்தி ஏற்படாது என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் இவ்வுலகில் ஏதாவது ஒரு வகையில் செல்வத்தை பெருக்கிக் கொண்டாலும் அல்லாஹ்வின் எச்சரிக்கையின் கீழ் வருகிறார்கள். அனாதையின் செல்வத்தை விழுங்குபவர்கள் தொடர்பாக அல்லாஹ் கூறுகிறான். அனாதைகளின் செல்வங்களை அநியாயமாக விழுங்குவோர், நிச்சயமாக தங்கள் வயிறுகளில் நெருப்பைத்தான் நிரப்பிக் கொள்கின்றனர். (4:11)

இவ்வாறு அநியாயம் இழைப்பவர்களுக்கு உதவி செய்பவர்களும் அல்லாஹ்வின் எச்சரிக்கையிலிருந்து விலகியவர்கள் அல்ல. இது தொடர்பாக அந்த வசனத்தை தொடர்ந்து வருகிறது.

நீங்கள் பேசும் பொழுது, அது உறவினராக இருப்பினும் நேர்மையை கடைபிடியுங்கள். (6:153)

எனவே இது மிகவும் அஞ்ச வேண்டிய நிலையாகும். அனாதைகளின் செல்வத்தையும் உடைமைகளையும் பாதுகாக்கவும் வேண்டும். தவறான முறையில் அதை யாரும் பயன்படுத்தினால் ஒருபோதும் அவருக்கு உதவி செய்யக் கூடாது. பிறகு அனாதையின் செல்வங்களை பாதுகாக்கும் போது அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி விட்டால் அவர்களிடம் அவர்களின் உடைமைகளையும் செல்வங்களையும் ஒப்படைத்த பிறகு அல்லாஹ் கூறுகிறான். நீங்கள் நிறுவையையும் அளவையும் முழுமையாக கொடுங்கள். அதாவது வியாபாரத்தில் ஏமாற்றாதீர்கள்.

சமுதாயங்களின் அழிவுக்கு வியாபாரத்தில் ஏமாற்றுதல் ஒரு முக்கிய காரணமாக அமைந்து விடுகிறது. சஹாபாக்கள் தங்களது பொருட்களை விற்கும் போது அதை வாங்குபவருக்கு அதிலுள்ள நஷ்டம் வெளிப்படையில் அவருக்கு தெரியாவிட்டாலும் அவர்கள் இதில் இன்ன இன்ன குறைகள் இருக்கின்றன என்று கூறி விடுவார்கள். இதன் மூலம் எந்தவித ஏமாற்றுதலும் இருக்காது. இதில் இறுதியாக அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ்விடம் நீங்கள் செய்து கொண்ட உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். (6:153)

முதல் விஷயங்கள் எல்லாம் சமூகத்தின முன்னேற்றத்திற்காகவும் அதன் உரிமையை நிறைவேற்றுவதற்காகவும் கொடுக்கப்பட்ட போதனைகளாகும். இந்த கட்டளைகளையெல்லாம் வழங்கிய இறைவனின் அறிவு எல்லை இல்லாததாகும். யார் எந்த அளவு உடன்படிக்கையை பேணுகிறார் என்று அவர் நன்கு அறிவார். உங்களது உடன்படிக்கைகளை அல்லாஹ்வை முன் நிறுத்தி நிறைவேற்றினால்தான் அல்லாஹ்வின் உரிமையையும் அவனது படைப்பினத்தின் உரிமையையும் சரியான முறையில் உங்களால் வழங்க முடியும். இது எல்லாம் நமக்கு புரிந்தால்தான் நாம் அறிவுரை பெற்றுள்ளோம் என்று பொருள். அல்லாஹ்வின் கட்டளையின்படி உறுதியாக நிலைத்திருக்க முயற்சி செய்துள்ளோம் என்று பொருள். இது எனது சக்திக்கும் திறனுக்கும் அப்பாற்பட்டது என்று ஒருபோதும் உள்ளத்தில் கருத வேண்டாம். அல்லாஹ்வின் கட்டளைகள் எல்லாமே நமது சக்திக்கு உட்பட்டதுதான் என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். நாம் இந்த கட்டளைகளை பேண வேண்டும். நமக்கு சிந்தனை இதன்படி இருந்தால் இதன்படி செயலாற்ற நாம் முயற்சி செய்தால் அல்லாஹ் கூறுவது போன்று அதாவது நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்வோர் (இதனை நினைவில் கொள்வார்களாக). நாம் எவரின் மீதும் அவருடைய தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பை சுமத்துவதில்லை. அவர்கள் சுவர்க்கத்திற்குரியவர் ஆவர்; அதில் என்றென்றும் வாழ்ந்து வருவர். (7:43)

நாம் எப்போதும் அல்லாஹ்வின் முன் குனிபவர்களாவும் எப்போதும் அவனது கட்டளைகளின்படி செயல்படுபவர்களாகவும் இருக்க அல்லாஹ் நமக்கு உதவி புரிவானாக. அவன் நமது சக்திகளையும் திறமைகளையும் நன்கு அறிந்து அவனது கட்டளையின்படி செயலாற்ற பணித்துள்ளான். அவன் நமது மிகக் குறுகிய சக்திகளுக்கு ஏற்றாற்போல் செயல்படுவதற்கு பொறுப்புகளை சுமத்தியுள்ளான். அதோடு அவன் தனது எல்லையில்லாத அருட்கொடைகளையும், கருணையையும் கொண்டு தனது மன்னிப்பு என்ற போர்வையில் நம்மை மூடுவதாகவும் நற்செய்தி வழங்கியுள்ளான். அவனது எல்லையில்லாத கருணையின் மூலம் ஈமானில் உயர்ந்து நல்ல செயல்கள் செய்வதற்கு முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 15.05.2009

Translated by : Maulavi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456